ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1988/38 - 2016 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2016.10.14

1988/38 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KWDS/LND/01/ACQ/03/2014
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2014/LO/230

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கலவான பிரதேச செயலகப் பிரிவில், குக்குலு கோரளை யில், உட பத்துவையில், பொத்துபிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவில் பஹல பொத்துபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள மு.கி.ப. 936 இன் மேலதிக இல. 11 மற்றும் தாள் இல. 11 இன் துண்டு இல. 1068 எனக் காட்டப் பட்டுள்ள அளவில் சுமார் 0.1075 ஹெக்டயார் விஸ்தீரண முடைய பொல் கொரட்டுவ என்னும் காணி.

இங்கு பகிரங்கத் தேவையென்பது பொதுபிட்டிய பொலிஸ் காவல் நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக காணி எடுத்துக் கொள்ளல்.

1. துண்டு இல. 1

மு.கி.ப. 936 இன் துண்டு இல. 1068 மேலதிக இல. 11 மற்றும் தாள் இல. 11; காணியின் பெயர்: பொல் கொரட்டுவ; உரிமை கோருபவர்: எச். எம். சுசன்த ஹேரத், வித்தியால மாவத்தை, பொத்துபிட்டிய; விஸ்தீரணம்: 0.1075 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கலவான பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. டீ. எல். உதயகுமாரி,
பிரதேச செயலாளர்,
கலவான.

பிரதேச செயலகம்,
கலவான,
2016, செத்தெம்பர் 28.

10 - 1769

---

### திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2015.04.17 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு 1910/3 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி III - காணிகள் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட 4/886 ஆம் இலக்க அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளை உட பத்துவையில், கிரிஎல்ல பிரதேச செயலகப் பிரிவில், மாட்டுவாகல கிராம அலுவலர் பிரிவிற் குட்பட்ட மு.கி.ப. 325 இன் தாள் இல. 23 இன் லொட் இல. 391 விஸ்தீரணம் 0.2023 ஹெக்டயார் எனக் குறிப் பிடப்பட்டுள்ள காணி கிரிஎல்ல பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ குடிமனையை அமைப்பதற்காக அரசாங் கத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்,
கிரிஎல்ல.

பிரதேச செயலகம்,
கிரிஎல்ல.

10 - 1770

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.